1973 மார்ச் 6]

எண்ணத்தில் செய்யப்படுகிறது. ஏனென்றால் வசதிகளில்லாத ஊர்களிலே ஆசிரியைகள் பணியாற்ற வேண்டுமென்றால் வேறிடங்களிலேயிருந்து நாள்தோறும் செல்வதற்குச் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, முதல் சலுகை ஆசிரியைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற முறையில் சென்ற ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 1973–74 இல் ஆசிரியைகள் குடியிருப்புக்காக 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்கள் தங்கள் தங்கள் ஊரிலேயே தங்கி வருவதை விரும்புகிறார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது அவர்களுடைய விருப்பமாக இருக்கலாம். ஆனால் அதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றன. எங்கே இருக்க வேண்டும், எந்த நிலைமைகளிலே இருக்க வேண்டுமென்று இருக்கின்றன. ஆகவே, பள்ளிகள் இருக்கும் இடங்களிலே, பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலே இருக்கும் இடங்களிலே குடியிருக்க இடமில்லாத நிலை இருந்தால் பக்கத்திலிருந்து வருவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, It has become very difficult to secure houses for teachers even in villages and they demand higher rents also and at times the teachers have to live in cattle sheds also. May I know from the Hon. Minister for Education whether, if it is not possible to provide houses, Government would consider to pay some house rent allowance to the teachers in villages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பெரு நகரங்களுக்கு மட்டும் வேண்டுமானால் செய்யலாம். ஆனால் எல்லாக் கிராமங்களுக்கும் தருவது என்றால் எல்லா அலுவலர்களுக்கும் தர வேண்டும், எல்லாத் துறையில் இருப்பவர்களுக்கும் தர வேண்டும். சம்பளம் என்று கொடுப்பதே, குடியிருப்பு, சாப்பாடு எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான். குடியிருக்க

இடமும் தந்து, சாப்பாடும் போட்டு, உடைகளும் கொடுத்து எல்லா வசதிகளும் செய்து கொடுத்துவிட்டால் சம்பளம் என்று தனியாக ஏன் தர வேண்டும் என்பது புரியவில்லை. ஆனால் எல்லாவற்றையும் செய்யலாம். நிதி வசதி மிகப் பெரிய அளவில் பெருகினால் செய்யலாம். ஆனால் இப்பொழுது உள்ள நிலையில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் போதுமான வசதிகள் இல்லாதவற்றிற்கு அதிலே கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. மு. இரத்தினசபாபதி: தலைவரவர்களே, கிராமங்களிலே வேலைபார்க்கின்ற ஆசிரியர்கள் அங்கே குடியிருக்க வீடுகள் இருக்கின்ற நிலையில் அங்கே தங்காமல் 10, 12 மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள நகரங்களிலே தங்கிக்கொண்டு கிராமங்களுக்குத் தினசரி சென்று வகுப்பை நடத்துகிறார்கள். அவர்கள் கண்டிப்பாகக் கிராமங்களிலேதான் தங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே கூறியபடி எல்லா ஆசிரியர்களுக்கும் எல்லா இடங்களிலும் இடம் கிடைப்பதில்லை. சில ஊர்களில் அங்கே பள்ளிக்கூடம் வேண்டுமென்று பொதுமக்கள் வற்புறுத்திக் கேட்டு வாங்குகிறார்களே தவிர அங்கேயிருந்து பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு உதவி செய்யவோ, வீடு பார்த்து வைக்கவோ முன் வருவதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் வேறு இடங்களிலிருந்துதான் வரவேண்டும். அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒழுங்காக, நேரத்தோடு பள்ளிக் கூடத்திற்கு வந்து பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பதைக் கண்காணித்தால் போதும். போலீஸ் அதிகாரிகள் என்றால் அங்கே கட்டாயம் இருக்கவேண்டும், டாக்டர்களாக இருந்தால் கட்டாயமாக அங்கேயே இருந்து தீர வேண்டும். ஆனால் ஆசிரியர்கள் இரவு 12 மணிக்கு அல்லது இரவு 3 மணிக்கு அங்கேயே இருந்து தீர வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவே தான் அவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து இம்மாதிரி ஒழுங்காக, நேரத்தோடு வந்து பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பதில் கவனம் செலுத்துகிறோம். காலதாழ்வோடு வந்தால் அவர்களைப் பொறுத்தமட்டும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMILNADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1973 மார்ச் 6]

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : தலைவரவர்களே, மத்திய அரசின் முழு உதவித் தொகையுடன் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு வீடு வீதம் கட்டப்பட்டு வந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறதா? அதற்காக ஒதுக்கப்பட்ட வீடுகள் முழுவதும் கட்டப்பட்டு வருகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தத் திட்டத்தைப்பற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால் இதுவரையில், 1,600 ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தந்திருக்கிறோம். சென்ற ஆண்டு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சம வெளிப் பகுதிகளில் வீடு கட்ட 5,500 ரூபாய் ஆகிறது. மலைப் பிரதேசத்தில் வீடு கட்டுவதற்கு 8,300 ரூபாய் செலவாகிறது. 10 இலட்சம் ரூபாய் நிதியிலே வீடுகள் கட்ட வேண்டியிருக்கிறோம்.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு பொருளாதாரம் இடம் தாவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை வீட்டு மனைகளுக்குப் பட்டா கேட்டால் கொடுக்கப்படுமா? அதில் கட்டிக் கொள்வதற்குக் கடன் உதவி அளிப்பதில் அவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள் ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்படக் கூடியவர்கள். ஓர் ஊரிலேயே வீடுகட்ட வசதி செய்துகொடுத்துவிட்டால் அந்த இடத்திலேயிருந்து அவர்களை மாற்ற இயலாது. எனவே அப்படிப்பட்ட சங்கடங்கள் வரக்கூடிய நிலைமை இருப்பதால் அது காரிய சாத்தியமாகாது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, வீடுகள் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் நிதி போதாத காரணத்தால் பலவிடங்களில் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட காலத்திற்குள், இத்தனை